**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No. 147/2024**
**PW 1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. புருஷோத்தமன் |
| Father's Name | : | ராஜி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.07.2025.
A2 to 4 present. A1 absent. Petition u/s 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை மேற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.02.2024 ம் தேதி திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது , காவல் ஆய்வாளர் சங்கர் அவர்களுடன் நானும், என்னுடன் சிறப்பு உதவி ஆய்வாளர் இளங்கோவன், முதல் நிலை காவலர் 1638, காவலர் 2081 ஆகியோர் பார்ட்டி சங்கிதமாக 11.02.2024 அன்று அதிகாலை 04.00 மணிக்கு திருவண்ணாமலை பெருமாள் நகர் ரயில்வே கேட் அருகில் வாகன தணிக்கையில் இருந்த போது , ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். வாகன தணிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான இருசக்கர வாகனத்தில் வந்த TN 25 AW 8199 Royal Enfield சிவப்பு நிற வண்டியை ஓட்டி வந்த நபரையும், அவருக்கு பின்னால் வந்த TN 30 BC 9712 Ashok Leyland Dost வாகனத்தையும் சோதனை செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் இரண்டாவது எதிரி முருகன் தான் TN 25 AW 8199 Royal Enfield சிவப்பு நிற வண்டியை ஓட்டி வந்த நபர். TN 30 BC 9712 Ashok Leyland Dost

வாகனத்தை பரசுராமன் என்பவர் ஓட்டி வந்தார் . (எதிரி ஆஜரில்லை, மனு அனுமதிக்கப்பட்டது). சோதனையின் போது Ashok Leyland Dost வாகனத்தில் 35 லி கொள்ளளவு கொண்ட 15 வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்கள் இருந்தன . அந்த கேன்களை திறந்த பார்த்த போது சாராய நெடி இருந்தது . அதனால் ஆய்வாளர் இருவரையும் விசாரித்து முருகன் மற்றும் பரசுராமனை 04.20 மணிக்கு கைது செய்தார். பரசுராமனை விசாரித்து காலை 04.30 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கொடுங்குப்பம் குமார் என்பவர் (சாட்சி 4 வது எதிரியை அடையாளம் காட்டினார் ) தியாகி அண்ணாமலை நகர் முருகன் என்பவருக்கு கொடுத்து அனுப்பியதாக சொன்னார் . அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆய்வாளர் 15 கேன்கள் சாராயம், Dost வாகனம், பரசுராமன் பயன்படுத்திய VIVO ஆன்ட்ராய்டு செல்போனையும், NOKIA பட்டன் செல்போன் ஆகியவற்றை மகசரில் கைப்பற்றினார் . அந்த மகசரில் நானும், முதல் நிலைக் காவலர் 1638 முருகன் என்பவரும் கையொப்பம் செய்தோம் . என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அந்த கைப்பற்றுதல் மகசர். அதில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த மகசர் அ.சா.ஆ. 1. வழக்கு சொத்துக்களை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சில்வர் கலர் VIVO செல்போன் அ.சா.பொ.1. (வழக்கு சொத்து இல்லாத காரணத்தால் இத்துடன் இந்த விசாரணை நிறுத்தப்படுகிறது).

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.